(This question paper contains 2 printed pages)

Roll No.

Sl. No of Question Paper: 5187

Unique Paper Code: 208162

E

Name of the Paper: Functional Grammar and Skill of Language
Name of the Course: B. A. (Prog.) Tamil B
Semester: I

Duration: 3 Hours

Max. Marks: 75

## பகுதி I

I. எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக: (15)

1. எழுத்து என்றால் என்ன? விவரிக்க.
2. முதலெழுத்துகள் என்றால் என்ன? சான்று தந்து விளக்குக.
3. மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகளைச் சான்றுகள் தந்து விவரிக்க
4. ஐகாரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம் – இவை பற்றி விளக்குக.
5. குற்றியலுகரம், குற்றியலிகரம் – இவை பற்றி விளக்குக.

II. ஏதேனும் ஒரு வினாவுக்கு விடை தருக: (10)

1. வினைச்சொல் என்றால் என்ன? சான்றுகளுடன் விளக்குக.
2. இயற்சொல் என்றால் என்ன? எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.
3. திரிசொல் என்றால் என்ன? சான்று தந்து விவரிக்க.

III. ஏதேனும் ஒரு வினாவுக்கு விடை தருக: (10)

1. வாக்கியம் என்றால் என்ன? விளக்குக.
2. வல்லினம் மிகும் இடங்களைச் சான்று தந்து விளக்குக.
3. உடம்படுமெய் என்றால் என்ன? விவரிக்க.

IV. கடிதத்தின் வகைகளை விவரிக்க. (10)

(அல்லது)

ஒரு நிறுவன மேலாளர் பணிக்கு விண்ணப்பம் ஒன்று எழுதுக.

V. உரையாடல் உத்தி குறித்து விவரிக்க. (10)

(அல்லது)

அலுவலக ஊழியரிடம் உதவி கேட்கும் விதத்தில் அமைந்த ஓர் உரையாடலை எழுதுக.

P.T.O

VI. ஒரு பொருள் குறித்த பல சொற்கள் என்றால் என்ன? எடுத்துக்காட்டுகள் தந்து விவரிக்க. (10)

(அல்லது)

பல்பொருள் குறித்த ஒருசொல் என்றால் என்ன? சான்று தந்து விளக்குக.

VII. கீழ் வரும் பகுதியைப் படித்து கேட்கப்பட்டிருக்கும் வினாக்களுக்கு உரிய விடை அளிக்க: (10)

குலசேகரன் என்ற பொன்னுப் பாண்டியன் 1265-இல் வள்ளியூரை ஆண்டான். அவனுடைய படத்தைப் பார்த்த வடுக (கன்னடிய) இளவரசி அவன் மீது ஆசை கொண்டாள். அவனுடைய வீரதீரச் செயல்களைப் பற்றி கேள்விப் பட்டு, அவனையே திருமணம் செய்து கொள்ள உறுதிபூண்டாள். அவளது தந்தை இச்செய்தியை, குலசேகர பாண்டியனுக்குத் தூதர்கள் மூலம் சொல்லி அனுப்பினான். வடுகர் கீழ்ச்சாதியினர். எனவே, திருமணம் செய்து கொள்ள பாண்டியன் மறுத்து விட்டான். சினங்கொண்ட கன்னடியன், தென் திருவிதாங்கூர் மன்னர் துணையுடன் குலசேகரப் பாண்டியன் நாட்டைப் படையெடுத்து, குலசேகரனைச் சிறைப்பிடித்து, இளவரசியை மணக்க அவனைப் பல்லக்கில் அழைத்து வந்தான். வரும் வழியில், குலசேகரப் பாண்டியன் தற்கொலை செய்து கொண்டான். மனம் கலங்கிய இளவரசி அவன் பிணத்துக்கு மாலையிட்டு, அவனோடு உடன்கட்டை ஏறினாள். எனக்கும் என் கணவருக்கும் கோயில் கட்டுக என அவளுடைய ஆவியிட்ட கட்டளையை கனவில் கேட்ட அவளது தந்தை, அவர்களுக்குக் கோயில் கட்டினான். அக்கோயில் 'வடுகச்சி மலை' என்ற பெயரால் வழங்கி வருகிறது.

அ. கன்னடிய மன்னன் எந்தச் செய்தியை, யாருக்குத் தூதுவர்கள் மூலம் அனுப்பினான்?

ஆ. பாண்டியன் திருமணம் செய்து கொள்ள மறுத்ததன் காரணம் என்ன?

இ. குலசேகரனைச் சிறைப்பிடித்ததன் மூலம் நிகழ்ந்த விளைவுகளைக் கூறுக.

ஈ. இளவரசியின் ஆவி கூறியது என்ன?

உ. மேற்கண்ட பத்திக்குப் பொருத்தமான தலைப்பைச் சூட்டி, அப் பத்தி தெரிவிக்கும் மையக் கருத்தையும் எழுதுக.